பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 16 சனிக்கிழமை 02.09.2023 கதிர் 295

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை கடைசிநேரத்தில் நிறுத்தம்

## புதிய திகதி அறிவிக்கப்படும் என்கிறது தூதரகம்

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கைப் பயணம் நேற்றிரவு கடைசி நேரத்தில் திடீரென நிறுத்தப்பட்டது.இலங்கைக்கானதனது இருநாள் பயணத்தை அவர் இன்று தொடங்குவதாக இருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் அந்தப்பயணம்ஒத்திவைக்கப்படுவதாக கொழும்பில்உள்ளஇந்தியஉயர்ஆணையரகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவரது பயணம் தொடர்பான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது. திட்டமிடப்பட்டிருந்த இருநாள் பயணத்தன்போது பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமானரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்புகளின்போது ☞2

## இது ரகசியம் அல்ல!

போர் முடிவுக்கு வந்த பின்னர் மிகப் பெரும் பிரச்சினையாக மாறி இருப்பது போதைப் பொருள் பாவனை. அதிலும் வடக்கு கிழக்கில் இது கையாள முடியாத பிரச்சினையாகமாறியிருக்கின்றது. போதைப் பொருள் மற்றும் தங்கம் கடத்தப்படும் முதன்மை வழியாக வடக்கு கிழக்கு கரையோரங்களே இருக்கின்றன. போர் நடந்த வரைக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தவரைக்கும் - போதைப் பொருள் குறித்த பேச்சே வடக்கு கிழக்கில் இருக்கவில்லை. அப்போதும் இலங்கை போதைப் பொருள் வர்த்தகத்தின் விநியோக மாற்றுப்புள்ளியாக இருந்தது. ஆனால் அதன் பாதிப்பு தமிழர் பகுதிகளில் இருக்கவில்லை.

போர் முடிந்த பின்னர் தொடக்கத்தில் வடக்கு கிழக்கு போதைப் பொருள் கடத்தலுக்கான மார்க்கமாக உருவெடுத்ததே தவிர, அதனைப் பயன்படுத்துவதும் விற்பதும் குறைவாகவே இருந்தது. இப்போது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு அதன் பயன்பாடும் இங்கு பல்கிப் பெருகி உள்ளது. இவற்றைக் ☞2

# செப். 6 முதல் மூன்று நாள்கள் விவாதம்

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான வரைவு எதிர்வரும் 06, 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பை எதிர்வரும் ☞2

# எம்முடன் பேச ஏதுமில்லை நீதியை நிலைநிறுத்துங்கள்

## ரணிலுக்கு கர்தினால் அறைகூவல்

நீதியைநிலைநாட்டாதவர்களுடன்நாம்என்னபேசுவது? அவர்கள் எம்மை நரிகள் என்று நினைக்கின்றார்கள். ஒருசில ஆயர்களுடன் பேச்சு நடத்திவிட்டுநான் அவர்களை புறக்கணிப்பதாக பரப்புரை செய்யப்படுகின்றதுஎம்முடன் பேசுவதற்கு எதுமில்லை. விசாரணைகளைச் செய்து நீதியைநிலைநாட்டுவதற்கான அதிகாரம் இருக்கின்றது. அதனை நடைமுறையில் முன்னெடுப்பதுதான் பொருத்தமானது என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைதெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற விசேட வழிபாடுகளின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் பயங்கரவாதக் குழுவுக்கு முழுமையான ஆதரவளித்தவர்கள் இருக்கின்றார்கள் என்ற தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. ☞2

# இந்திய இராணுவம் மீள வந்தால் ஒருபோதும் திரும்பிச் செல்லாது

## முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

இலங்கையில்இனி ஒரு இனக் கலவரம் ஏற்பாட்டால் அதைத் தடுக்கவரும் இந்திய இராணுவம்திரும்பிச்செல்ல மாட்டாது என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும்நாடாளுமன்றஉறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன. தெரிவித்தார்.

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கே அச்சுறுத்தல் விடப்படும் நிலையில்மீண்டும்1983ஆம் ஆண்டைப்போல் இலங்கையில் இனக் கலவரத்தை ஏறபடுத்த முயற்சிப் பதாக நீங்கள் கருதுகின் றீர்களா என்ற கேள்விக்கே அவர் இப்படிப் பதிலளித் துள்ளார்.

"இந்த நாட்டில் மீண்டும் ஓர் இனக் கலவரம் வருவதற்கான வாய்ப்பே கிடையாது. ஒருவேளை இனக் கலவரம் ஏற்பாட்டால் அப்போது வரும் இந்திய இராணுவம் திரும்பிச்செல்லவே மாட்டாது என்பது ஜனாதிபதிக்கும் தெரியும். இதனால் மீண்டும் இனக்கலவர நிலை ஏற்பட ஜனாதிபதி விரும்பமாட்டார்" எனப் பதிலளித்தார்.

# மருந்துக்கொள்வனவு தொடர்பாக பொதுமக்கள் கருத்தறிய திட்டம்

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களை பெற தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிதல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்காக குழு நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்தகுழுவின்மூலமே நாட்டில்தற்போது இடம்பெற்று வரும் மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின்கருத்துக்களை பெறுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி, நாட்டில் தற்போதுள்ள மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியும்.

இது தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் எதிர்வரும் மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இலங்கையில் மருந்துக் கொள்வனவு செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், வெளிப்படையான கொள்வ னவு முறையை அறிமுகப்படுத்துவதற்கும், உயர்தர மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்கும், மருந்து ஒழுங்குமுறைமறுசீரமைப்பு தொடர்பானயோசனைகளை முன்வைப்பதற்கும் ஐந்து நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று கடந்த ஜுலை மாதம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு ☞2

# ட்ராக்டர் குடைசாய்ந்ததில் 15 வயதுச் சிறுவன் சாவு

## வவுனியாவில் பரிதாபம்



வவுனியாவில் உழவு இயந்திரம் குடைசாய்ந்து 15 வயதுச் சிறுவன் உயிரிழந்தான்.

பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடுக்குளம் பகுதியில் நேற்று மாலை இந்தச்சம்பவம்இடம்பெற்றது. விபத்தில் சிக்கிய மற்றொரு சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மணல் ஏற்றியவாறு குளத்தின் அணைக்கட்டில் பயணித்துக்கொண்டிருந்த உழவு இயந்திரம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து திடீரெனக் குடைசாய்தது என்று சாரதி தெரிவித்தார்.

உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த இருசிறுவர்களும் படுகாயமடைந்தனர். அவர்கள் ☞2

# உணவுப் பாதுகாப்பின்மையால் நாட்டில் 60 லட்சம் பேர் பாதிப்பு

## ஐ.நா. தகவல்

ஆறு மில்லியன் இலங்கையர்கள்உணவுப்பாதுகாப்பின்மையால்பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோடா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் மற்றும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட வறுமை சுட்டெண் மற்றும் பல பாதிப்பு சுட்டெண் வெளியீட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றதுடன், அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞2

# யானைக்கு நேர்ந்த கதியே மொட்டுக்கும்

## அடித்துக் கூறுகின்றார் சம்பிக்க

2020ஆம் ஆண்டு நடைபெற்றபொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சிக்கு ஏற்படும்.

இவ்வாறு 43ஆம் படையணியின் தலைவரும்,நாடாளுமன்றஉறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் சம்பிரதாயக் கட்சிகளுக்கு மக்கள் எழுச்சியுடன் முடிவு கட்டப்பட்டுள்ளது. அக்கட்சிகளின் உறுப்பினர்கள் என்னதால் நினைத்தாலும் மக்கள் ஆணை இனி கிடைக்கப் போவதில்லை. 2022ஜுலை 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ச மட்டுமல்ல சம்பிரதாய கட்சிகளும் அரசியல் ரீதியில் தோற்கடிக்கப்பட்டன. எதிர்க்கட்சியும் தமது பொறுப்பை நிறைவேற்றவில்லை. இதனால்தான் மக்கள் தாமாகவே வீதிக்கு இறங்கி ஆட்சியாளர்களை விரட்டியடித்தனர்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மொட்டுக் கட்சி இன்னும் அறிவிப்பு விடுக்கவில்லை. 2020 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ☞2

# நனோ தொழில்நுட்ப தண்ணீர் சுத்திகரிப்பு முறைகள் வடக்கு கிழக்கில் நிறுவப்படும்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரித, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில்நனோதொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன, சிறுநீரக நோயாளிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களுக்காக இந்த நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைகள் பயன்படுத்தப்படுகிறது என்று நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் 19 நோய்த் தொற்று மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நாடு எதிர்கொண்ட பொருளாதார பின்னடைவினால், நாம் முதலில்தயாரித்ததிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்பட்ட போதிலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்க வேலைத்திட்டங்களின் ☞2

## கண் சத்திரசிகிச்சையின் பின்னர்

# நுவரெலியாவில் 17 பேருக்கு பகுதியளவில் பார்வையிழப்பு

(செ.தி.பெருமாள்)

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடத்தப்பட்ட 37 கண் சத்திரசிகிச்சைகளில் 17 பேர் பகுதியளவில் பார்வையிழந்துள்ளதுடன் இருவர் முழுமையாகப் பார்வைஇழந்துள்ளனர்என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்தியசாலையில் வியாழக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் கனிஷ்க இதனைத் தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில்பலதகவல்கள்வந்தாலும் உண்மை நிலவரத்தை இங்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அவர், கண்களுக்கு செலுத்தப்பட்ட மருந்துகள்வைத்தியர்களால் தவறாகியதாக நினைக்கின்றனர் என்றும் இதற்கான பொறுப்பை மருத்துவர்கள் ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அரசின் நலனுக்காக தரம் தாழ்ந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அவசர கொள்வனவு விலையில் பல வகையான மருந்துகள் கொண்டு வரப்படுவதாகவும் பெரும்பாலானவை ☞2

## இனி இது .....

கடத்துவதற்கென்றேவாகனங்களை வடிவமைக்கப்பட்ட வாகனத்துடனும்பெருமளவு பணத்துடனும் 5 பேர் யாழ்ப்பாணத்தில் ஓரிரு தினங்களுக்குமுன்னர்கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழ் திரைப்படங்களில் பார்த்த காட்சிகள் இப்போது நேரில் அரங்கேறும் அவலம் ஏற்பட்டிருக்கின்றது.

இது இத்தோடு நிற்கப்போவதில்லை என்பதைக் கடந்த முழு நிலா நாளில் தெற்கில் நடந்திருக்கக்கூடிய சம்பவம் ஒன்று உணர்த்துகின்றது.

அரங்கலவில ஶ்ரீ சதர் மாராம விகாரையில் பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் முழுப் போதையில் அத்துமீறி நுழைந்த 10 பேர்கொண்டகட்டுக்கடங்காத கும்பல் ஒன்று தலைமைப் பிக்குவுக்கு கொலைமிரட்டல் விடுத்து தாக்கியுள்ளது.

இந்தத்தாக்குதலில்பிம்புரத்தேவ தம்மரக்கிதாலங்கார என்ற 28 வயதுடைய சாமனேர தேரரும் அவரது சகோதரரும்படுகாயமடைந்துள்ளனர். விகாரையின் சொத்துக்களை உடைத்த அந்தக் கும்பல் ஒரு இலட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளது என்று பிம்புரத்தேவ சிலுமினிசாய விகாரையின் தலைவர் குசலதம்மாலங்கார நாயக்க தேரர்பொலிஸில்முறைப்பாடு செய்துள்ளார்.

அரலகங்விலபிம்புரத்தேவ கிராமத்தில் வசிக்கும் இளைஞர்கள் குழுவொன்றே கொலை மிரட்டல் விடுத்து, தாக்கி ஆலயத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளது. இதற்குக் காரணம் அந்த விகாரையைச் சேர்ந்த பிக்குகள் போதைப் பொருளுக்கு எதிரான பரப்புரையில் ஈடுபட்டமை தான்.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில்சட்டவிரோத போதைப்பொருளுக்குஎதிராக தாம் உட்பட புதிய பிக்குகள் கடுமையாகச்செயற்பட்டனர் எனவும், இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் போதைப்பொருளுக்கு அடிமையான போது அதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்தனர் எனவும் கூறப்படுகின்றது. அதனாலேயே இப்போது விகாரையில் நுழைந்து பிக்குகளைத்தாக்கியுள்ளனர்.

இதேபோன்றசம்பவங்கள் நாளை வடக்கு கிழக்கிலும் நடக்காது என்று சொல்வதற்கில்லை. அதற்கு முன்னராக போதைப் பொருள் வர்த்தகத்தையும் பயன்பாட்டையும் கடத்தலையும்ஒழிக்கஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் திரண்டெழவேண்டும். இல்லையேல்போதை வியாபாரிகள் சமூகத்தின் மேலெழுந்து நிற்பார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையுடனான இந்திய பாதுகாப்பு உறவுகளின் சகல அம்சங்களும் மீளாய்வுசெய்யப்பட இருந்தன என்று அந்த அறிக்கை தெரிவிதக்கறது அத்துடன் நுவரெலியா மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கும் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்கள் பயணம் செய்ய இருந்தார்என்றும்அறிக்கை தெரிவிக்கின்றது.

அதேநேரம், ராஜ்நாத் சிங்கின்பயணமானதுஇலங்கையுடன் தற்போதுள்ள மிகநெருக்கமானநட்புறவை மேலும் வலுவாக்குவதில் இந்தியாவின்தொடர்ச்சியான உறுதிப்பாட்டை வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாதுகாப்பு விவகாரங்களில் இரு நாடுகளுக்கும்இடையில்காணப்படும் நட்புறவின் நிலைபேறான பிணைப்பினை வலுவாக்குவதில் இந்த பயணம் மிகவும் முக்கியத்துவம்வாய்ந்தமைமல்கல்லாக அமைகின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ்.டெல்லி எனும் போர்க்கப்பல்நேற்றுக்காலையில்கொழும்புதுறைமுகத்தை வந்தடைந்தது.

163 மீற்றர் நீளமுடைய, இக்கப்பலில் வருகை தந்த கடற்படை வீரர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுலா செல்லவுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது. அத்துடன், குறித்த கப்பலை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களுக்குசந்தர்ப்பம் வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கப்பல் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும். இதன்போது, மேற்கு கடற்பரப்பில் இலங்கை கடற்படைகப்பலுடன்பயிற்சி நடவடிக்கைகளிலும் குறித்த கப்பல் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நனோ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் நாடு மீண்டும் பொருளாதாரஉறுதிப்பாட்டை அடைந்து வருவதன் காரணமாக, படிப்படியாக அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடிந்துள்ளது.

அந்தவகையில்,தற்போது நாட்டின் குடிதண்ணீர்த் தேவையில் 62 சதவீதத்தை நிறைவு செய்துள்ளது. பல பிரதேசங்களில் மக்கள்நீர்வழங்கல்அமைச்சினால் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீருக்குப்பதிலாக பல்வேறு மாற்றுக் குடிதண்ணீர் மூலங்கள் ஊடாகத் தமது குடிதண்ணீர்த் தேவையை நிவர்த்தி செய்துகொள்வதன் காரணமாகநாட்டின் மொத்த குடிதண்ணீர் தேவையில் 85 சதவீதத்தை நாம் நிறைவு செய்தால் நாட்டின் குடித்தண்ணீர்த்தேவையை முழுமையாக நிவர்த்தி செய்யலாம்.

மேலும், கடந்த காலங்களில் தேசிய நீர் வழங்கல் அமைச்சு என்ற வகையில், கிராமங்களுக்கே சென்று மக்களின் குடிதண்ணீர்த் தேவை தொடர்பில் ஆராய்ந்து பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலமே இந்த 62சதவீத அடைவை எட்டியது. அதற்காகசபையின் அதிகாரிகள்அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும்வடிகாலமைப்புசபை செயற்பட முடியாத கஷ்டப் பிரதேசங்களிலும் மற்றும் மலையகத்தின் பல்வேறு இடங்களிலும், அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மூலம் அப்பிரதேச மக்களுக்குஅவசியமானகுடிதண்ணீரை வழங்க பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலானவைகளின் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரித, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவைகளின் பணிகள்பூர்த்திசெய்யப்பட்டு வருகின்றன, சிறுநீரக நோயாளிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களுக்காக இந்த நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைகள் பயன்படுத்தப்படுகிறது.

நீர் வழங்கல் சபை மற்றும் சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகிய இரண்டிற்கும் நீர் வழங்க முடியாத பிரதேசங்களுக்கு நீர்வழங்கும்வேலைத்திட்டம் ஒன்று வஸிப் (WASSIP) என்றபெயரில்நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதற்போதுகேகாலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் செயற்படுத்தப்படுவதாகவும், கடல் சீற்றம் போன்ற பல்வேறு காரணங்களினால்ஆறுகளில் உப்புநீர்கலப்பதைத்தவிர்க்க தடுப்புகள் அமைக்கும் பணிகளும் பல்வேறு ஆறுகளை அண்டிய பகுதிகளில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன -என்றார்.

## ட்ராக்டர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் மக்கள் உதவியுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக குறித்த இரு சிறுவர்களும் வவுனியா வைத்தியசாலைக்குஅனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சென்று சேர்வதற்கு முன்னதாகவே ஒரு சிறுவன் உயிரிழந்திருந்தான் என்று உறுதிப்படுத்தப்பட்டது.

விபத்தில்அதேபகுதியை சேர்ந்த 15 வயதான ச.சதுசன் என்ற சிறுவனே உயிரிழந்தான்.

(100)

## யானைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட நிலையே அடுத்த தேர்தலில்மொட்டுகிகட்சிக்கும் ஏற்படும் - என்றார்.

## எம்முடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாளிறு தாக்குதல் நடைபெற்ற பின்னரும் பொலிஸ்மா அதிபர் தனது பதவியில் நீடித்தார்அல்லவா?ரை,கோட் அணிந்திருக்கின்றார்கள் என்பதற்காக பொலிஸ் மா அதிபராகி விட முடியாது.

சட்டமாஅதிபரோ,அதிகாரிகளோ,தற்போதையஆட்சியாளர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ, ஜனாதிபதியோ, பிரதமரோ எமக்கு நீதியைப்பெற்றுக்கொடுக்கும் வெளிப்படைத்தன்மையான விசாரணைவேண்டும்என்று கோரவில்லை.

மக்கள் எழுச்சியை அடுத்து தேர்தல் நடத்தப்படும் என்றார்கள். ஆனால் தேர்தல் நடத்தப்படவில்லை. நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை மாற்றிச் செயற்படும் பெரியவர்கள் அல்லவா நாட்டின் தலைவர்களாக உள்ளனர்.

நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை மாற்றிச் செயற்படுகின்ற அளவிற்கு நாடாளுமன்றத்திற்கு இயலுமை உள்ளது. எனவே நான் சட்டத்திற்கு அஞ்சவில்லை. நான் நாடாளுமன்றத்துக்கே அஞ்சுகின்றேன் என்ற நிலைப்பாட்டில் தான் நாட்டின் தலைவர் உள்ளார். ஏனென்றால் நாடாளுமன்றத்தில் அவருக்கு என்று வாக்குகள் இல்லை. அதுவேறொரு கட்சியின் வாக்குகளாக உள்ளது. ஆகவே தான் நாடாளுமன்றத்திற்கு அஞ்சும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல்விடயத்தில்விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு 90 சதவீதமான செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. ஆனாலும் கைது செய்யப்பட வேண்டியவர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மட்டும் முணுமுனுத்துக் கொண்டிருக்கின்றார்.

கடமையை நிறைவேற்றவே அதிகாரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளீர்கள். ஆகவே கடமையை நிறைவேற்றுங்கள். எமக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். சுயாதீனக் குழுவின் ஊடாக விசாரணைமுன்னெடுக்கப்பட வேண்டும்.- என்றார்.

## நுவரெலியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரமற்றவை என்றும் குறிப்பிட்டார்.

அவற்றில் ப்ரெட்னி சோலோன் கண் மருந்தும் ஒன்று என்றும் இனிமேல் இதுபோன்ற தரம் குறைந்த மருந்துகளை கொண்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வைத்தியர்கள் என்று சொன்னாலும்சிலஇடங்களில் மனநோயாளிகள் போல நடத்தப்படுகிறோம் எனவும் இந்த நிலைமைக்கு இழுத்திருப்பது ஆட்சியாளர்களே என்றும் கூறிய அவர், வைதியர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படாததால் அவர்கள் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என்றார்.

சத்திரசிகிச்சைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குஅரசு எந்த இழப்பீடு நிவாரணமும் வழங்கவில்லை என்றும் அப்பாவி மக்களுக்கு இழப்பீடுக்கு அப்பாற்பட்ட ஒன்றை வழங்குவது கட்டாயமாகும் என்றார்.

## செப். 6 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

08 ஆம் திகதி நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மருந்துக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின் அறிக்கை மூன்று மாதங்களுக்குள்வழங்கப்பட வேண்டும். குறித்த அறிக்கை தயாரிப்பதற்கு முன்னதாக, மருந்துக் கொள்முதல் செயல்முறை குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும். எந்தவொரு தனிநபரோ அல்லது நிறுவனமோ இவ்வாறு தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும் என்றுள்ளது

## உணவுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உலக வங்கி அறிக்கைகளின்படி, 2021 மற்றும் 2022 க்கு இடையில் ஒரு வருடத்தில் வறுமை விகிதம் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளது. உலக உணவுத் திட்டத்தின் அறிக்கைகளின்படி ஆறு மில்லியன் இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2022 இன் மிகை பணவீக்ககாலத்தில்பலருக்கு உணவுக்கான அணுகல் மற்றும் கிடைக்கும் தன்மை குறைவாக இருந்தது. இந்த சிரமங்கள் அவற்றின் செல்வாக்கு பரவியதால் தனிநபர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையே வேறுபாடுகள்ஏற்படவழிவகுத்தது.

ஆட்சியாளர்களால் பல சீர்திருத்தச் செயல்முறைகள் செயல்படுத்தப்படும் போது, அனைத்து மட்டங்களிலும் உள்ள மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைப் புரிந்துகொள்வது எமது பொறுப்பாகும்.

இந்த அறிவு இடைவெளியை நிரப்ப, ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் முதன்முறையாக 2022-23 தேசிய குடிமக்கள் கணக்கெடுப்பைத் தொடங்கியது. நாடு முழுவதும் உள்ள 25,000 குடும்பங்கள் எதிர்கொள்ளும் உண்மைகளை இது வெளிப்படுத்தியுள்ளது - என்றார்.

# தற்காலிகமாக சபுகஸ்கந்தவை மூட முடிவு

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை செப்டெம்பர் 18 முதல் ஒக்டோபர் 8 வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து, மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெற்றோல் உற்பத்தி அலகுகளின் செயல்பாட்டை மீளமைப்பதற்கான பராமரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதற்காக, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படவுள்ளன.

திருத்த பணிகள் ஏற்படும் குறித்த காலப்பகுதியில் எரிபொருள் விநியோகத்தை தட்டுப்பாடின்றி பேணுவதற்கு தேவையான எரிபொருள் இருப்புக்கள் மற்றும் எரிபொருள் கேள்விகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன -என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# மக்கள் பொறுமை இழக்குமுன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள்

## முஜிபூர் ரஹ்மான் வலியுறுத்து



மக்கள் பொறுமை இழக்கும் முன்னர் ஜனாதிபதி தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், 'சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

இந்த நிலையில் சுகாதார அமைச்சரைக் காப்பாற்றும் வகையில் செயற்படுமாறு ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஜனாதிபதியும் இந்த குற்றவாளி அமைச்சர்களைப் பாதுகாக்கும் பொருட்டே தற்போது செயற்பட்டு வருகிறார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அனைத்து விசாரணைகளும் நிறைவடைந்துவிட்டன என தற்போது பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியாக இருந்தபோது ஹரின் பெர்னாண்டோவும் மனுஷ நாணயக்காரவும் பல விடயங்களை நாடாளுமன்றில் வெளிப்படுத்தியிருந்தார்கள். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக உண்மைகளைக் கண்டறிந்துகொள்ளத்தான் அரசாங்கத்துடன் இணைவதாகவும் அவர்கள் அன்று கூறினார்கள். எனவே, இவர்கள் அன்று வெளிப்படுத்திய அந்தக் கருத்துக்கள் உண்மையானவையா இல்லையா என்பதைப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரியப்படுத்த வேண்டும். இவர்களின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டனவா?

அதேபோன்று ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடித்துவிட்டார்களா என்று அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோவிடமும் மனுஷ நாணயக்காரவிடமும் நாம் கேட்க விரும்புகிறோம். உங்கள் அரசாங்கம் இதுதொடர்பாக விசாரணைகளை முடித்துவிட்டதா? மக்கள் இவற்றையெல்லாம் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொறுமை இல்லாது போகும் முன்னர் தேர்தல் ஒன்றை நடத்துமாறு நாம் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கிறோம். - என்றார். (05)

# மருந்துக் கொள்வனவு தொடர்பில் மக்கள் கருத்துக்களை பெற முடிவு

நாட்டில் இடம்பெற்று வரும் மருந்து கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தரமான மருந்துகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறிதல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இதன்படி, நாட்டில் தற்போதுள்ள மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் மருந்துக் கொள்வனவு செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், வெளிப்படையான கொள்வனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கும், உயர்தர மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்கும், மருந்து ஒழுங்குமுறை மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளை முன்வைப்பதற்கும் ஐந்து நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை கடந்த ஜூலை மாதம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிக்கை தயாரிப்பதற்கு முன்னதாக, மருந்து கொள்முதல் செயல்முறை குறித்து பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு தனிநபரோ அல்லது நிறுவனமோ இவ்வாறு தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (05)

# 4, 13 வயது மகள்கள் துஷ்பிரயோகம் தந்தையர் இருவர் தெற்கில் கைது

தமது மகள்களையே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இரு தந்தையர்கள் தொடங்கொட மற்றும் மெதிரிகிரிய பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். தொடங்கொட பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முப்பத்திரண்டு வயதுடைய இராணுவ சிப்பாய் தனது நான்கு வயது மகளை துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது பதின்மூன்று வயது மகளை துஷ்பிரயோகம் செய்த மெதிரிகிரிய நகரில் வசிக்கும் 38 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு கனரக வாகனங்கள் செல்லத் தடை

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இறங்குதுறை பகுதிக்கு கனரக வாகனங்கள் செல்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் இதனை தெரிவித்துள்ளார்.

இறங்கு துறையின் கீழ் பகுதியில் இருக்கும் இரும்புகள் துருப்பிடித்து வலுவிழந்து காணப்படுவதால் இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறங்கு துறை பகுதிக்கு மனித வலுவை பயன்படுத்தி பொருள்களைக் கொண்டு சென்று படகுகளில் ஏற்றுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

# அழைப்பாணை

முன்னணி சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவுக்கு கோட்டை நீதிவான் திலின கமகே அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளார். துமிந்த நாகமுவ, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை அவமதிக்கும் வகையில் முகநூல் மற்றும் யூடியூப்பில் அறிக்கை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு துமிந்த நாகமுவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (05)

# சட்டவிரோத மதுபான விற்பனை குருநகரில் ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டார்.

போயா தினமான புதன் கிழமை மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 25 போத்தல் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் மேலதிக நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

# 3,000 சட்டவிரோத சிகரெட்டுகள் பஞ்சிகாவத்தையில் பிடிபட்டன

## ஒருவர் கைது

கொழும்பு பஞ்சிகாவத்தை பிரதேசத்தில் பொலிஸாருடன் இணைந்து இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 3,000 வெளிநாட்டு சிகரெட்டுகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்றைக் கைப்பற்றியதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படைக்கு கிடைத்த தகவலின்படி, கரையோர பொலிஸாருடன் இணைந்து கொழும்பு பஞ்சிகாவத்தை பகுதியில் இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சிகாவத்தை சந்தியில் வீதியில் பயணித்த சந்தேகத்துக்கிடமான வான் ஒன்றை சோதனையிட்டபோது வானில் சட்டவிரோதமாக விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட 3,000 வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)





# உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் குறித்து முக்கிய ஆதாரத்தை அரசு தவறவிட்டுள்ளது

## கர்தினால் மெல்கம் ரஞ்சித் சாடல்

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதை தாமதமாக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கத்தை கர்தினால் மல்கம் ரஞ்சித் மீண்டும் சாடியுள்ளார்.

பயங்கரவாத குழுவினர் ஈவிரக்கமற்ற தாக்குதல்களை மேற்கொள்வதற்கான அனைத்து ஆதரவையும் வழங்கிய குழுவொன்றுள்ளதாக எங்களுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என கர்தினால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெறாத சில விடயங்கள் குறித்து கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் அபுஹிந் என்ற நபரோ குழுவோ இருப்பதாக புதிய தகவல்கள் கிடைத்துள்ளன என கர்தினால் தெரிவித்துள்ளார்.

இந்த ஆதாரம் வெளியானவேளை ஐந்து நீதிபதிகளில் ஒருவர் இந்த பெயர் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார், ஊடகங்கள் இருப்பதால் தன்னால் விவரங்களை வெளியிட முடியாது என குறிப்பிட்டுள்ள சாட்சி எழுத்தில் அது குறித்த விடயங்களை வழங்கியுள்ளார் என கர்தினால் தெரிவித்துள்ளார். (05)

# அரச அனுசரணையுடனான காணி அபகரிப்பு பற்றி ஐ.நா. உயர்ஸ்தானிகர் கவனம் செலுத்தவேண்டும்

## விக்கினேஸ்வரன் வலியுறுத்து

வடக்கு, கிழக்கில் குருந்தூர், தையிட்டி, செட்டிக்குளம், நாவற்குழி போன்ற இடங்களில் அரச அனுசரணையுடன் காணி அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன என்ற உண்மை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கையின் ஊடாக வெளிக்கொணரப்படவேண்டும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி வரையான ஒருமாதகாலத்துக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரின் முதல் நாள் அமர்வில் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இருப்பினும் கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான மிகமோசமான குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும், இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான நியாயபூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்ற விமர்சனம் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் வலியுறுத்தப்படவேண்டிய விடயங்கள் பற்றிக் கருத்துரைக்கையிலேயே சி.வி. விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் முன்னைய அமர்வுகளின்போது இலங்கையிடம் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவை உரியவாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது பற்றி ஆராயப்படும்.

குறிப்பாக மனித உரிமைகள் பேரவையின் முன்னைய அறிக்கையில் பாதுகாப்புத்துறைசார் செலவினங்களைக் கட்டுப்படுத்தல், ஊழலை இல்லாதொழித்தல், கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நியாயமான விசாரணைகளை மேற்கொள்ளல், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து நியாயமான விசாரணைகளை மேற்கொள்ளல், வடக்கு கிழக்கில் படையினரின் எண்ணிக்கையைக் குறைத்தல், படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்துதல், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டன.

எனவே இவற்றை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் தாமதம் குறித்து இம்முறை ஆராயப்படும். அதேவேளை எதிர்வரும் கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், தற்போது வடக்கு, கிழக்கில் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்படவேண்டும்.

அதிலும் குறிப்பாக குருந்தூர், தையிட்டி, செட்டிக்குளம், நாவற்குழி போன்ற இடங்களில் அரச அனுசரணையுடன் காணி அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன என்ற உண்மை வெளிக்கொணரப்படவேண்டும்.

அதேபோன்று அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிர்ப்புத்தெரிவித்து பௌத்த பிக்குகள் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இருப்பினும் சில அரசியல் காரணங்களுக்காக சிங்கள பௌத்த அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குகின்றது.

எனவே இதுபற்றி உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிடப்படுவதுடன், அரசின் இத்தகைய செயற்பாடுகள் நாட்டின் எதிர்கால நலனுக்கு எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பது பற்றி சுட்டிக்காட்டப்படவேண்டும். மேலும் உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதில் தொடர் காலதாமதம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயர்பதவிகளுக்குத் தமிழ் தெரியாத சிங்களவர்கள் நியமிக்கப்படல் என்பன பற்றியும் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் உள்வாங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தரமற்ற மருந்துகளின் பாதிப்புக்கு இழப்பீடுகள் வழங்குவது அவசியம்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடத்தப்பட்ட 37 கண் சத்திரசிகிச்சைகளில் 17 பேர் பகுதியளவில் பார்வையிழந்துள்ளதுடன் இருவர் முழுமையாகப் பார்வை இழந்துள்ளனர் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் கனிஷ்க இதனைத் தெரிவித்துள்ளார். தரமற்ற மருந்தே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார். மருந்துகளின் காரணமாக ஏற்படக்கூடிய இந்தப் பிரச்சினைக்கு மருத்துவர்கள் ஒருபோதும் பொறுப்பேற்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்ற பிரச்சினை யாழ்ப்பாணத்திலும் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சில வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. அப்போதும் மருந்தின் மீதே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அந்தப் சம்பவத்திலும் பலருக்குப் பார்வையிழப்பு ஏற்பட்டது.

ஆனால், இன்று தரமற்ற மருந்துகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பெருமளவில் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில்தான் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் மீதான விவாதம் 6, 7, 8 ஆகிய நாட்களில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், தரமற்ற மருந்துகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு யார் பொறுப்பு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணம்? அமைச்சரின் பதவி பறிபோனால்கூட (அது ஒருபோதும் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை) பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நீதி?

அரசின் நலனுக்காக தரம் தாழ்ந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அவசர கொள்வனவு விலையில் பல வகையான மருந்துகள் கொண்டு வரப்படுவதாகவும் பெரும்பாலானவை தரமற்றவை என்றும் அவற்றில் ப்ரெட்னிசோலோன் கண் மருந்தும் ஒன்று என்றும் இனிமேல் இதுபோன்ற தரம் குறைந்த மருந்துகளை கொண்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர் கனிஷ்க தெரிவிக்கிறார்.

சத்திரசிகிச்சைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்த இழப்பீடும் வழங்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்கு இழப்பீடு மட்டும்போதாது என்றும் அப்பாற்பட்ட ஒன்றை வழங்குவது கட்டாயமாகும் என்றும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

அவர் சொல்வது முற்றிலும் நியாயமானது. பாதிக்கப்பட்டவர்கள் அதிலும் கண்புரை (கற்றாக்) நோய்க்கு சிகிச்சைபெற வந்த வயதானவர்களே இப்படிப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த வயதான காலத்தில் அவர்கள் பார்வையையும் இழப்பதென்பது மிக மோசமானதொன்று. அவர்களை உடல் ரீதியாக மட்டுமன்றி உள ரீதியாகவும் பெருமளவில் பாதிக்கக்கூடியது. இத்தனை பெரிய தவறை அரசு செய்துவிட்டு அதை வெறுமனே கடந்து செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது.

இறக்குமதிசெய்யப்படும் மருந்துகள் தரமற்றவை என்று சொல்லமுடியாது, அவை பல்வேறு தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே தயாரிக்கப்படுகின்றன, அவற்றை இங்கு களஞ்சியப்படுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளால்தான் அவற்றில் தொற்று ஏற்படுகின்றது என்ற ஒரு வாதமும் முன்வைக்கப்படுகின்றது. உண்மை அதுவாகவேகூட இருந்தாலும் அதற்கும் அரசே பொறுப்பு. களஞ்சிய வசதிகளைச் சரிவர அரசு ஏற்படுத்தாததே பிரச்சினைக்குக் காரணம் என்னும்போது அதன் விளைவுகளை அப்பாவி மக்கள் மட்டும் அனுமதிப்பதென்பது ஏற்புடையதல்ல. எனவே தரமற்ற மருந்துகளால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அனைவருக்கும் இழப்பீடு மற்றும் நிவாரணம் வழங்கப்படவேண்டும். அரசு பொறுப்புக்கூற வைக்கப்படுதல்வேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இருக்கப் போகிறவர்கள் யார்?

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**



1970 ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட பெரும் தோல்வியின் பின்னர் அக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜே.ஆர். ஜெவர்த்தனவிடம் ''எப்படி மீண்டும் வெற்றி பெறுவது'' என்று வினவினார். அதற்கு ஜே.ஆர். பைபிளில் இருந்து ஒரு உவமையை மேற்கோள் காட்டி பதிலளித்தார்.

"பைபிளில் ஒரு அற்புதமான கதை உள்ளது. ஒரு நாள் ஒரு முதலாளி இயேசுவிடம் எப்படிப் பரலோகம் செல்வது என்று கேட்டார். அப்போது இயேசு, சொர்க்கத்திற்குச் செல்லவேண்டுமானால் ஊசிக் கண்ணுக்குள் செல்லக் கூடிய ஒட்டகத்தைப் போல மாற வேண்டும் என்றார். அப்படி ஊசி ஓட்டை வழியாகச் செல்லும் ஒட்டகத்தைப் போல நாமும் மாற வேண்டும். நாங்கள் புதிய கட்சியாக இருக்கவேண்டும். புதிய அணி அறிமுகப்படுத்தப்படவேண்டும். புதிய கொள்கைகள் முன்வைக்கப்பட வேண்டும்..." என்றார் ஜே.ஆர்.

ஜே.ஆர். அப்படிச் சொன்னாலும் பாரம்பரியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியை மாற்றுவது ஜே.ஆருக்கு இலகுவானதாக இருக்கவில்லை. தன்னால் முடிந்தவரை கட்சியை மாறினார். அதன் மூலம், ஜே.ஆரின் உறவினர்களால் முதலாளித்துவக் கட்சியாக உருவாக்கப்பட்ட யூஎன்பி என்று அழைக்கப்பட்ட கட்சியை ஒரு குட்டி மனிதனின் கட்சியாக அவர் மாற்றினார். கட்சி மேற்கத்திய ஆடைப் பண்பாட்டை அகற்றியது. தேசியப் போர்வையைப் போர்த்திக்கொண்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜே.ஆருக்குச் செய்யக்கடினமாக இருந்ததை, ஐக்கிய மக்கள் சக்தியினர் செய்தார்கள். பழைமை மாறாத ரணிலின் ஐ.தே. கட்சியைத் தரைமட்டமாக்கிவிட்டு, அந்த மண்ணில் இன்று இலங்கையின் புதிய மற்றும் இளமையான கட்சியைக்



கட்டினார்கள். அப்படியிருக்கும்போது, ஐக்கிய மக்கள் சக்தி தனித்து அரசியல் பயணத்தைத் தொடராமல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவேண்டிய தேவை என்னவுண்டு?

புதிய கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைக்கவேண்டும் என்று கூறுபவர்கள், 2024 தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அதைச் சொல்லவில்லை.

அவர்களுக்கு சிறிகொத்தாவின் (ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம்) மூலம் தனிப்பட்ட ரீதியில் பணம் சம்பாதிக்கவேண்டியிருக்கின்றது. ரணிலும் சஜித்தும் ஒன்று சேர வேண்டும் என்கிற குரலுக்குக் கைதட்டுபவர்கள் இரு வகைப்பட்டவர்கள். ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் மற்றது ஜனதா விமுக்திப் பெரமுனவினர் (ஜேவிபி). ஜே.வி.பி தலைவர் அனுரகுமார தெரிவிக்கும் கருத்துக்களைப் பார்க்கும்போது அது தெளிவாகத் தெரிகின்றது.

"இரண்டு தரப்புக்கள்தான் உண்டு. அவையிரண்டும் இரு துருவங்கள். ஒன்று தேசிய மக்கள் சக்தியோடு இணைந்திருப்பவர்கள் மற்றவர்கள் தேசிய மக்கள் சக்தியோடு இணையாது இருப்பவர்கள் என்கிற இரண்டு தரப்புக்கள்தான் உண்டு. அதற்கு இடையில் ஒன்றுமேயில்லை..." - என்று தெரிவித்தார் அனுரகுமார திஸாநாயக்க.

நளிந்த ஜயதிஸ்ஸ சொல்லும் கதையைக் கேட்கும்போது அது இன்னும் தெளிவாகப் புரியும்.

''சூரியன் நன்றாக உதிக்கும்போது இரண்டு முகாம்களும் நன்கு பிரிக்கப்பட்டுள்ளன. இடையில் எதுவும் இல்லை. இந்தப் பக்கம் நாட்டையே அழிக்கும் துரோகிகளின் முகாம். பொது ஜன பெரமுனவின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இங்கு சிறிது காலம் இருப்பார்கள், ராஜித உட்பட ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர்கள் மற்றும் அந்த சிறிய இடதுசாரி கும்பல்கள் அனைவரும் ஒரே முகாமில் அணிவகுத்து நிற்கின்றனர். அந்த எதிரி முகாம் மிகவும் தெளிவாக உள்ளது. இந்தப் பக்கம் மக்கள் முகாம்..." என்று விவரிக்கிறார் நளிந்த ஜயதிஸ்ஸ

"அடுத்த பொதுத் தேர்தலின்போது இந்த அனைத்துத் தரப்புகளும் சேர்ந்து இது ஒரே முகாமாக மாறும். இந்த மாத்தளையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளார். அந்தப் பெண் நாடாளுமன்ற உறுப்பினர் ரணிலும் சஜித்தும் தன் இரு கண்களைப் போன்றவர்கள் என்கிறார். ரணிலுடன் இணக்கம் காண பேச்சு நடத்தி வருவதாக ராஜித சேனாரத்ன டெய்லி மிரர் பத்திரிகைக்கு தெரிவிக்கிறார். குறுகிய காலத்திற்கு ரணிலுடன் இணைந்து ஆட்சி அமைக்கதயார் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கிறார். எனவே எல்லாம் மிகவும் தெளிவாக உள்ளன.

அவர்கள் அனைவரும் ஒரே மிதவையில் ஏறவேண்டியிருக்கிறது. அந்த மிதவையில் பாம்புகளும் உண்டு. எனவே இந்த இடத்தில் இரு தரப்புக்கள் மட்டுமே உண்டு என்பது தெளிவானது" என்கிறார் அனுரகுமார திஸாநாயக்க

இது ஜேவிபியின் கனவு. முதலில் ரணிலையும் அநுரவையும் மையமாக வைத்து வெளியே வந்தவர்கள் ரணிலின் சீடர்கள். ரணில் ஜனாதிபதியான உடனேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கும் அநுராவுக்கும் இடையில்தான் போர் என்று சொன்னார்கள். சஜித்தையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் தூக்கி எறிய அந்த கனவை வரைந்தார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றி பெற்றாலும் பரவாயில்லை, சஜித்தை வெற்றி பெற விடமாட்டார்கள் என்ற கருத்தைப் பரப்பினார்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் தோற்றாலும், தாம் இழந்த மக்கள் அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு ரணிலை கட்சியின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் ஆக்க ஐக்கியதேசியக்கட்சியினர் நினைக்கிறார்கள். இருந்தாலும் ரணிலுக்கு எதிரான அநுரவின் போராட்டத்தின் நடுவில் சஜித் குதித்தால் வெற்றி ஜேவிபி வெற்றி பெறுவது கடினம் என்று தெரிந்தே ஜே.வி.பி இந்தக் கனவை சொந்தமாக்கிக்கொண்டது.

இப்போது ஐக்கிய மக்கள் சக்தி ரணிலுடன் இணையும் வரை ஜே.வி.பி காத்திருக்கின்றது. ரணிலைத் தோற்கடிப்பது முந்திரி தின்பதற்குச் சமம் என்பது ஜேவிபிக்குத் தெரியும். 2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலைத் தோற்கடித்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ மகிந்தவோ இல்லை. அது ஜேவிபிதான். 2004 பொதுத் தேர்தலிலும் ஜேவிபி ரணிலைத் தோற்கடித்தது.

ஆனால், சஜித் ரணில் அல்ல என்பது ஜேவிபிக்குத் தெரியும். ஜேவிபிக்கு இருக்கும் மக்கள் ஆதரவுத் தளம் சஜித்துக்கும் இருக்கிறது. அதற்கு அவரது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ காரணம். நகரத்தில் உள்ள சிறுவன், கிராமத்தில் உள்ள ஏழை என்று எல்லோரும் பிரேமதாஸவை விரும்புகின்றனர். மறுபுறம், கோரட்டு சூட்டுப் போட்டவர்களும் சஜித்துடன் உண்டு. இவர்கள் ரணில் பிரதிநிதித்துவப்படுத்தும் மேல்தட்டு வர்க்கத்தினருடன் பேசி அவர்களையும் கவரக் கூடியவர்கள்.

இதனால் சஜித்தை தோற்கடிப்பது கடினம் என ஜே.வி.பி அஞ்சுகிறது, சஜித் வேட்பாளராக வந்தால் வெல்லக்கூடிய குதிரை என்பதால் ரணில் எதிர்ப்புக் கூட்டம் ஜே.விபியை விட்டு வெளியேறி சஜித் மீது பந்தயம் கட்டும். அதனால்தான் சஜித்தையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் நசுக்க ஜே.வி.பி. முயற்சிக்கிறது. அது ஜேவிபியின் தவறில்லை. ஜே.வி.பியின் கணக்கீடுகள் சரியானவையும் கூட அதானால்தான் அவர்கள் ரணிலும் சஜித்தும் சேருவார்கள் என்று கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள்.

"எங்களுக்கு மக்களாதரவு 30% மட்டுமே உள்ளது. அதை 50% ஆக்குவதற்கு நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவேண்டும்" என்பது சிறிகொத்தாவில் தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்திக்குள் தமது கோட்பாடுகளை விற்பவர்களின் கதை".

இலங்கையின் பொதுத் தேர்தலில் தோற்கும் பிரதான கட்சி 30% வாக்குகளைப் பெறுகின்றது. 1977 தேர்தலில் படுமோசமான தோல்வியைச் சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 29% வாக்குகளைப் பெற்றது. 2010 பொதுத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த ஐ.தே.க. 29.34% வாக்குகளைப் பெற்றது. அந்த வகையில் பார்த்தால், இலங்கையின் பிரதான கட்சிகள் தோற்றபோதும் 29% வாக்குகளைப் பெற்றுள்ளன.

தமது வாக்குகளை யாருக்கு அளிப்பது என்பதைக் கடைசி நேரத்தில் தீர்மானிக்கும் வாக்காளர்கள் வெற்றிபெற்ற கட்சிக்கு வாக்களித்ததனால், தனது வாக்கு வாங்கியான 30 சதவீதத்தை பிரதான கட்சிகள் பெறுகின்றன. அதே கட்சிகள் வெற்றிபெறும்போது 50 சதவீதம் வாக்குகளைப் பெறுகின்றன. அதற்காக - அந்த மேலதிக வாக்குகளின் தேவைக்காக - அவை வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைக்கின்றன. எனவே அடுத்துவரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி 50% வாக்குகளைப் பெறுவது கடினம் அல்ல. அதற்காக, மக்கள் வேண்டாம் என்று ஒதுக்கிய ஐ.தே.க. போன்ற கட்சியுடன் இணையவேண்டும் என்பதல்ல. புதிய கட்சிகள் மற்றும் புதிய குழுக்களுடன் கூட்டணி அமைப்பதுதான் அந்தக் கட்சி செய்யவேண்டியது.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் முன்னணியில் இருக்கக்கூடியவர்கள் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் தோல்விகளைச் சந்தித்தவர்களே. ரணில் இரண்டு தேர்தல்களில் தோற்றிருக்கிறார். அனுரகுமார கடந்த தடவை வெறும் 3.16 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தவர். சஜித்தும் 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். 2019 தேர்தலில் 3.16% சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோற்ற அநுரகுமார திஸநாயக்க இன்று வெற்றிக் குதிரையாக முடியும் என்றால், அதே தேர்தலில் 41.99% வாக்குகளைப் பெற்றுத் தோற்ற சஜித் இம்முறை வெற்றிக் குதிரையாக முடியாது என்று கூறுவது கேலிக்குரியது.

மக்கள் 2018 உள்ளூராட்சித் தேர்தலிலேயே சுதந்திரக் கட்சி யின் கதையை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் 2020 இல் ஐ.தே. கட்சியை முடித்தார்கள். அவர்கள் பொது ஜன பெரமுனவின் கதையை 2022 'அறகலய'வில் முடித்து வைத்தனர். இன்று இந்த நாட்டில் இரண்டு கட்சிகளே உள்ளன. ஒன்று ஐக்கிய மக்கள் சக்தி, மற்றொன்று ஜனதா விமுக்தி பெரமுனா. 2024இம் ஆண்டு இந்த இரு கட்சிகளுக்கு இடையேதான் தேர்தல் போட்டி இருக்கும்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பத்திரிகையாளர் துன்புறுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் அவசியம்

## அவர்களைப் பாதுகாப்பதற்கான குழு வலியுறுத்து

இலங்கையில்சமீபத்தில் சுயாதீன ஊடகவியலாளர்கள் செல்வகுமார் நிலாந்தன், வலசிங்கம் கிருஸ்ணகுமார், அன்டனி கிறிஸ்டபராஜ் ஆகியோர் துன்புறுத்தப்பட்டமை குறித்து அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும்என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒகஸ்ட் 22 ஆம் திகதி பகல் 12.30 மணியளவில் சிங்கள பௌத்தமதகுரு தலைமையிலான 50 பேர் வாகனங்களை சுற்றி வளைத்து மூன்று பத்திரிகையாளர்களை சிறைப்பிடித்தனர். கிழக்கு மாகாணத்தின் மயிலத்தனை மடுவில் அரச ஆதரவுடன் இடம்பெறும் தமிழ் பண்ணையாளர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் குறித்து நேரடியாகப் பார்வையிட்டு செய்தி வெளியிட்ட பின்னரே இந்த சம்பவம் இடம்பெற்றது என செய்திகளும், இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் என்ற உரிமை அமைப்பும் நாங்கள் தொடர்புகொண்ட மூன்று பத்திரிகையாளர்களும் தெரிவித்துள்ளனர்.

வாள்கள் கத்திகளுடன் வந்தவர்கள் மூன்று பத்திரிகையாளர்களையும் விவசாயிகள் மற்றும் அனைத்து மதகுழுவை சேர்ந்தவர்களையும் வெளியான இடமொன்றிற்கு நகர்த்தி உள்ளூராட்சி அமைப்பின் உறுப்பினர்களின் முன்னிலையில் அவர்களை பணயக்கைதிகளாக பிடித்துள்ளனர்.

அனைத்து மதங்களை சேர்ந்த குழுவினர் உடனடியாக பொலிஸாரை தொடர்புகொண்டபோதிலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற பின்னரே நான்கைந்து மணித்தியாலத்தின் பின்னர் பொலிஸார் அங்கு சென்றுள்ளனர்.

ஒகஸ்ட் 30 ஆம் திகதி வரை பொலிஸார் இது குறித்த விசாரணைகளை ஆரம்பிக்கவில்லை என மூன்று பத்திரிகையாளர்களும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவிடம் தெரிவித்தனர்.

மயிலத்தமடுவிற்கு பொறுப்பான கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் பொலிஸ் பேச்சாளருக்கும் நாங் கள் அனுப்பிய தகவல்களுக்குப் பதில்கள் கிடைக்கவில்லை.

மூன்று சுயாதீன ஊடகவியலாளர்களும் மட்டக்களப்பில் சமீபத்தில் துன்புறுத்தப்பட்டமை குறித்து இலங்கை அதிகாரிகள் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். தமிழ் செய்தியாளர்களிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவிற்கு கொண்டுவரவேண்டும் என பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழுவின் திட்ட இயக்குநர் கார்லோஸ் மார்ட்டினெஸ் டி ல சென்ன வேண் டுகோள் விடுத்துள்ளார்.

தலையீடுகளோ அல்லது பழிவாங்கப்படலாம் என்ற அச்சமோ இன்றி தங்கள் சமூகத்தை பாதிக்கும் விடயங்கள் குறித்து செய்தி வெளியிடுவதற்கான உரிமை தமிழ் செய்தியாளர்களுக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்து மதகுருமார் ஒருவரை அந்த கும்பல் தாக்கியபோதிலும் தங்களை தாக்கவில்லை என மூன்று பத்திரிகையாளர்களும் பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழுவிடம் தெரிவித்தனர். (05)

# மாத்தளை மனிதப்புதைகுழி குறித்த ஐ.நாவின் கடிதத்துக்குப் பதில் எங்கே?

## வெளிவிவகார அமைச்சுக்கு மகஜர்

மாத்தளை மனிதப் புதைகுழி தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை யின் விசேட அறிக்கையாளர்கள் நால்வரால் எழுதப்பட்ட கடிதத்துக்கு உரியவாறு பதிலளிக்குமாறு வெளிவிவகார அமைச்சிடம் காணாமல்போனோர் குடும்பஒன்றியம்வலியுறுத்தியுள்ளது. வருடாந்தம் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி இம்முறை 'அவர்களை நினைவு கூருவோம், அவர்களை மறக்கமாட்டோம்' என்ற தொனிப்பொருளில் புதன்கிழமை சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினம் அனுட்டிக்கப்பட்டது.

அதனை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் கவனவீர்ப்புப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களை உள்ளடக்கி தெற்கில் இயங் கிவரும் அமைப்பான காணாமல்போனோர் குடும்ப ஒன்றியம், சர்வதேசவலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தையொட்டி வியாழக்கிழமைகொழும்பில்அமைந்துள்ள நீதியமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சிடம் இருவேறு மகஜர்களைக் கையளித்தது.

இம்மகஜர்கள்காணாமல் போனோர் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோவால் மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

அதன்படி வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்ட மகஜரில், மாத்தளை மனிதப்புதைகுழி தொடர்பில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்கள் நால்வரால் எழுதப்பட்ட கடிதத்துக்குப் பதில் வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

'வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் இயங்கிவருவதுடன் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமையை வலியுறுத்தும் அமைப்பு என்ற ரீதியில் அக்கடிதம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றோம்' என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோன்றுநீதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள மகஜரில்காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான 6 வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

காணாமல்போனோர் தொடர்பான உண்மையை வெளிப்படுத்துவதை முன்னிறுத்தி உரியவாறான விசாரணைகளை மேற்கொள்வதற்கான கடப்பாட்டை மீளுறுதிப்படுத்தல், வடக்கு, கிழக்கில் காணாமல்போனோரின் உறவுகளால் அளிக்கப்பட்ட 5 முறைப்பாடுகள் மற்றும் காணாமல்போனோர் குடும்ப ஒன்றியத்தால் அளிக்கப்பட்ட 6 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை நிறைவுசெய்தல், இராணுவத்தினரிடம் சரணடைந்தோரின் பெயர்ப்பட்டியலை வெளியிடல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான செயற்திறன்மிக்க இழப்பீடு வழங்கல் செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தல், இழப்பீட்டைப்பெற்றுக்கொள்வதற்கு மறுக்கும்குடும்ப உறுப்பினர்கள்மீது அழுத்தம் பிரயோகிப்பதைத் தவிர்த்தல், கடந்தகால ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் அடையாளங்காணப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுத்தல் ஆகியவையே அவ் வேண்டுகோள்களாகும்.

மேலும் மாத்தளை மாவட்டம் உள்ளடங்கலாக நாடளாவிய ரீதியில் வெவ்வேறுபட்ட காலப்பகுதிகளில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இந்த அமைச்சுக்களுக்கு முன்பாகக் கவனவீர்ப்புப்போராட்டத்திலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# புதிய கல்வி மறுசீரமைப்புக்களில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம்

## உபுல் மஹேந்திர ராஜபக்ஷ தெரிவிப்பு



ஆன்மீக ரீதியிலான சிறுவர் தலைமுறையை உருவாக்கும் வகையில் சமயக்கல்வியை மேம்படுத்தும் பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், அனைத்து மதங்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயக் கல்வியை, புதிய கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்குவதற்கு முன்மொழிவுகள் கிடைத்துள்ளன எனவும் மத விவகாரங்கள், சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார் வைக் குழுத் தலைவர் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் மத விவகாரங்கள், சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவர் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ இதனைத்தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த உபுல் மஹேந்திர ராஜபக்ஷ -

முப்பதுவருடகாலயுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்நாட்டில் இனங்களுக்கு இடையில் சகவாழ்வைக் கட்டியெழுப்ப பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்த துடன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் அந்த முயற்சிகள் வீழ்ச்சி அடைந்தன எனவும் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் இணைந்து அரசாங்கம் உள்ளிட்ட அனைவரும் இந்நாட்டில் வாழ்கின்ற அனைத்து இனமக்களுக்கும் இடையிலும் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருவதாகவும், அதன்படி, மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைஏற்படுத்தும் வகையிலேயே கடந்த முறை தேசிய வெசாக் கொண்டாட்டத்தை அனைத்து இன மக்களும் வாழக்கூடிய புத்தளம் பிரதேசத்தில் நடத்த நடவடிக்கை எடுத்ததாகவும் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நாட்டில்மதங்களுக்கு இடையில் சகவாழ்வை ஏற்படுத்த வேண்டுமாயின் பெரியோர்களுக்கு மத்தியில் புரிதலை ஏற்படுத்துவது அவசியமாக இருந்தாலும், இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர்களுக்கு அனைத்துஇனமக்களுடனும் ஒற்றுமையாக வாழ்வது குறித்து தெளிவூட்டுவதே நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை இந்நாட்டில் ஏற்படுத்த மிகப்பொருத்தமாக இருக்கும் என்று தாம் நம்புவதாகவும் இதன்போது மத விவகாரங்கள், சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவர் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ தெரிவித்தார். குறிப்பிட்டதொரு பிரதேசத்தை மாத்திரம் அடிப்படையாகக்கொள்ளாமல் நாடு பூராகவும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் சகவாழ்வு குறித்து மக்களைத் தெளிவூட்டுவது அவசியம் என்று குறிப்பிட்ட உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, அதற்கு அனைத்து மதத் தலைவர்களையும் இணைத்துக்கொண்டு செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சமய கல்வியின் தரத்தை மேம்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைக்கல்வி முறையில் சமயக் கல்வியை (அறநெறிப் பாடசாலைகள்) இணைத்து, அதற்கேற்ப முன்னுரிமைப் புள்ளி முறையை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளதுடன், துறைசார் நிபுணர்களுடன்கலந்துரையாடிய பின்னரே இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த எதிர்பார்க்கப்பதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இந்நாட்டில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும் என்றும் உபுல் மஹேந்திர ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார். (05)

# பூசகரிடம் வாள் முனையில் யாழில் வழிப்பறி கொள்ளை

ஆலயத்தில் பூஜையை முடித்துக்கொண்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்த பூசகரை வழிமறித்து வாள்முனையில் கொள்ளை கும்பல் ஒன்று வழிப்பறியில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணம்எழுதுமட்டுவாழ் பகுதியில் புதன்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பூசகர் வீடுதிரும்பிக்கொண்டிருந்த வேளை அவரை வீதியில் வழிமறித்த மூவர் அடங்கிய கொள்ளை கும்பல் ஒன்று, அவரை வாள் முனையில் அச்சுறுத்தி அவரிடம்இருந்தஒருதொகை பணத்தை கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# மதுவரித் திணைக்களத்தினர் இருவர் மீது தாக்குதல் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பு

*போதைப்பொருள் சோதனையில் ஈடுபட்ட கலால் திணைக்கள அதிகாரிகள் இருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*இவர்களில் கடுமையான வெட்டுக்காயங்களுக்கு உள்ளான ஒருவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், காயமடைந்த மற்றையவர் மத்துகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

# காத்தான்குடி பூர்வீக நூதன சாலை திருத்தவேலைக்காக மூடப்பட்டது



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி புராதன நூதனசாலை திருத்த வேலைகளுக்காக மூடப்படுகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை, வரலாற்றை பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இந்த பூர்வீக நூதனசாலைக்கு நாடெங்கிலும் இருந்து பெருமளவினர் அன்றாடம் சென்று பார்வையிடுகின்றனர்.

இந்த நூதனசாலையை பார்வையிடுபவர்களுக்கான நுழைவுச்சீட்டுகளும் அங்கே வழங்கப்படுகின்றன.

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் இலங்கை முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட ஆன்மிகம், அறிவியல், வர்த்தகம், வழிபாடு, அரசியல் உட்பட பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் இந்த நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன. பராக்கிரமபாகு மன்னரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த முஸ்லிம்களின் உருவங்களும் இந்த நூதனசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், வியாபார முறைகள், புராதன பள்ளிவாசல்கள், முதலாவது 'ரி.எஸ்' செய்த இடம் உட்பட பல நூறு இஸ்லாமிய கலாசாரங்கள் தொடர்பான பூர்வீக அடையாளங்களும் இங்கு காணப்படுகின்றன. பல பழைமையான பொருள்களையும் சில செயற்கையாக உருவாக்கப்பட்ட மாதிரி உருவமைப்புகளையும் காணக்கூடிய இந்த நூதனசாலையின் அறிவித்தல் பலகைகள் தற்போது சேதமடைந்துள்ளன.

சில காட்சியறைகளில் ஒட்டடைகள் காணப்படுகின்றன. சில பொருள்கள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறித்த நிலையத்தில் அதிகளவான குப்பைகள் சிதறிக் காணப்படுவதோடு, அங்கு வருகை தரும் பார்வையாளர்களை வழிநடத்துவதற்கான உத்தியோகத்தர்கள் குறைவாக உள்ளனர். அவ்வாறு வழிநடத்துநர்கள் இல்லாத காரணத்தால் சில பார்வையாளர்கள் செல்பி எடுப்பதற்காக அரிதான சில பொருள்களை தொடுவதாலும், விலைமதிப்பற்ற அச்சான்றுப் பொருள்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது காத்தான்குடி நகர சபையின் பராமரிப்பில் உள்ள இந்த நூதனசாலையை சில தினங்களுக்கு மூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மையின்றி, சேதமடைந்து காணப்படும் நூதனசாலையின் பகுதிகளை திருத்தியமைக்கும் பணிகள் இடம்பெறவுள்ளதால் எதிர்வரும் செப்ரெம்பர் 4ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை 10 நாள்களுக்கு நூதனசாலை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீக வரலாற்றைக் கூறும் வகையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் கலாசார மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன், தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள வழிகாட்டலில், பல மில்லியன் ரூபா செலவில் 4 மாடிகள் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த பூர்வீக நூதனசாலை கடந்த 2015 ஏப்ரல் 15 ஆம் திகதி காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு அநுர ஒருபோதும் சவாலாகவே மாட்டாராம்

## ஆஷு மாரசிங்க கூறுகிறார்

ஜனாதிபதி வேட்பாளராக தேசிய மக்கள் சக்தி அநுரகுமார திஸாநாயக்கவை பெயரிட்டிருக்கிறது. இதுபொதுவேட்பாளராக களமிறங்க இருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு எந்த வகையிலும் சவாலாக அமையப்போவதில்லை.

நாட்டைக்கட்டியெழுப்ப இருக்கும்ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாவார் என என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்-

அடுத்த வருடம் இடம்பெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்காக வேட்பாளர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கையில் எதிர்க் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

டலஸ் அணி இது தொடர்பாக ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளன.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடனும் கலந்துரையாடுவார்கள். ஆனால் இவர்கள் யாருக்கும் நாட்டை முன்னுக்கு கொண்டுசென்று, அபிவிருத்தி செய்ய எந்த திட்டமும் இல்லை. அதற்கான வேலைத்திட்டத்தையும்இவர்கள்இதுவரை முன்வைக்கவும் இல்லை.

என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியிலேயே அவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். நாட்டை முன்னேற்ற பாதைக்கு கொண்டுசெல்வதற்கான இலக்கொன்று அவரிடம் இருக்கிறது.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தையே தற்போது அவர் மேற்கொண்டு வருகிறார். நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருந்த சந்தர்ப்பத்தில் அன்று ஜே.ஆர் ஜயவர்த்தன நாட்டை அபிவிருத்தி செய்ய மேற்கொண்ட நடவடிக்கையையே தற்போது ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டு வருகிறார்.

அதனால் ஜனாதிபதி தேர்தலுக்கு எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றபோதும் ரணில் விக்ரமசிங்க 2048 ஆகும்போது நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் வேலைத்திட்டத்தை படிப்படியாக மேற்கொண்டு வருகிறார்.

அதற்காகவே அவர் வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டு அந்த நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு வருகிறார்.

அத்துடன் உத்தியோக பூர்வமாக ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவது அடுத்த வருடம் நவம்பர் மாதமளவிலாகும்.

அப்படி இருக்கும்போது எதிர்க் கட்சிகள் ஜனாதிபதி தேர்தலுக்காக ஏன் அவசரப்படவேண்டும் எனக் கேட்கிறோம்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் வேலைத் திட்டங்களைக் குழப்புவதற்கான நடவடிக்கையாகவே எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை கையில் எடுத்துக்கொண்டுள்ளன.

அதனால்தான் தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார திஸாநாயக்கவை பெயரிட்டிருக்கிறது. அது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை.



ஏனெனில் வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை, அதில் இருந்து மீட்டு, நாட்டின் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு கொண்டுவரநடவடிக்கை எடுத்தது ரணில் விக்ரமசிங்க என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.

புதிய தலைவர் ஒருவரை நாட்டுக்கு கொண்டுவந்து, நாட்டுக்கு ஏற்பட்ட நிலை மக்களுக்கு தெரியும். அந்த தவறை மக்கள் மீண்டும் செய்ய மாட்டார்கள்.

அதனால் அரசியல் அனுபவம். திறமை, சர்வதேச நாடுகளுடன் சிறந்த தொடர்புகளை மேற்கொள்ள முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாவார்.

ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு யாருக்கும் நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது என்பதை மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

அதனால் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடப்பட்டிருப்பது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளப்போவதில்லை.

நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமான ஒரே தலைவர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாவார். அவரால் நாட்டை கட்டியெழுப்ப முடியாமல்போனால் நாடு இல்லாமல்போகும். எனவே ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்க இருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கு அநுரகுமார திஸாநாயக்க ஒருபோதும் சவாலாகப்போபவர் அல்லர். - என்றார். (05)

# அரச அங்கீகாரத்துடன் தொழிலாளர்களுக்காக காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்த முயற்சி

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

மலையக பெருந்தோட்டத்துறையில் நாள் வேதன முறைமைக்கு பதிலாக இலாப பங்கீட்டு முறையை உருவாக்கி தொழிலாளர்களை உற்பத்தி பங்குதாரர்களாக மாற்றுவதே எமது நோக்காக உள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக்கூட்டம் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் தொழில் அமைச்சில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகளை முன்வைக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும்கூறியவைவருமாறு-

இலங்கையின் பொரு ளாதாரத்துக்கு 200 வரு டங்களுக்கு மேலாக பங்களிப்பு வழங்கிவரும் பெருந்தோட்டத்துறை நாள் வேதன முறையில் இருந்து, இலாப பங்கீட்டு முறைமைக்கு மாறவேண்டும் என்பதே எமது நோக்கமாக உள்ளது.



இலங்கையில் வாழும் எமது இந்திய வம்சாவளி மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் நாள் வேதனத்தையே பெறுகின்றனர். இது அவர் களுக்கு வழங்கும் அங்கீகார மாக அமையாது. எனவே, இலாப பங்கீட்டு முறையுடன் அவர்களையும் இந்த தொழில்துறையில் உற்பத்தியாளர்களாக மாற்றுவதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும். இதற்குரிய வேலைத் திட்டமே எனது அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

வேலையின்போது குளவி கொட்டுதல் உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களால் உயிரிழப்பு சம்பவங்கள் கூட பதிவாகியுள்ளன. சிலர் அங்கவீனமடைகின்றனர். தற்போது தொழில்துறை மாற்றம் பற்றி பேசப்படுகின்றது.

ஆகவே, அரசஅங்கீகாரத்துடன்தொழிலாளர்களுக்காககாப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை, பெருந் தோட்டத் தொழிலாளர்களை கௌரவிப்பதற்கான நாளொன்றை ஒதுக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும்.-என்றார்.

இ.தொ.காவின் உப தலைவரும், தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக் குழு உறுப்பினருமான பாரத் அருள்சாமியும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார். (05)

# குருந்தூர்மலைக்கு கிடைத்த நீதி ஒற்றுமைக்காக கிடைத்த வெற்றி

## க.சிவநேசன் பெருமிதம்

குருந்தூர்மலைக்கு கிடைத்த நீதி ஒற்றுமைக்காக கிடைத்த வெற்றியே என முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார்.

தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைபகுதியிலேஅமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை உள்ளிட்ட கட்டுமானபணிகள்தொடர்பிலான வழக்கின் கட்டளை வியாழக்கிழமை வழங்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே வழங்கப்பட்ட இந்த தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும்.

ஏனென்றால் இது நீண்டகால பிரச்சினை. சமாதானத்துக்கான ஒரு வழக்காகவே இது ஆரம்பத்தில் போடப்பட்டது.

ஆனால் சமாதானத்தை மீறி நடந்த நிகழ்வுகள் தான் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இந்தத் தீர்ப்பானது ஓர் ஆரம்ப படியாகவேகருதமுடியும். இதிலே இரண்டு விடயங்கள் ஒன்று திணைக்களங்கள் யாவும் சார்புநிலையில்இருக்கின்றன.

மற்றையது அமுலாக்கல் பிரிவுகள் சார்பாக நடந்து கொள்கின்றது என்பது இந்த தீர்ப்பிலே புலப்படுகின்றது.

ஆகவே, இந்தத் தீர்ப்பு என்பது ஆரம்ப நிலையாக இருந்தாலும் தொடர்ந்து நாம் பல படிகளாக செல்ல வேண்டி இருக்கின்றது. இந்த தீர்ப்புக்கு எந்தளவு முக்கியத்துவம் இந்தநாட்டின் பேரினவாதம்கொடுக்கின்றது என்பதையும் நாங்கள் எதிர்காலத்தில் அவதானிக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல இதனை ஒரு முன் உதாரணமாக உலக நாடுகளும், இந்த உலகத்தில் வாழ்கின்ற அனைவரும் ஒரு விடயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை நிச்சயமாக ஒவ்வொருவரும் அவர்கள் எதற்காக உழைத்தவர்கள் இப்பிரதேச மக்கள், கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டமை இந்த வெற்றிக்கு ஒரு காரணமாக நான் கருதுகின்றேன்.

அத்தோடு இப்பிரதேச மக்கள் ஒன்றிணைந்து தங்களது நீதிக்காக குரல் கொடுத்ததை காணமுடிந்தது. ஆகவே இந்த நீதி ஒற்றுமைக்காக கிடைத்த வெற்றியாக நான் கருதுகின்றேன். - என்றார். (05)

# குருந்தூர்மலை நீதிமன்ற தீர்ப்பை வைத்து அடுத்தகட்ட நடவடிக்கைக்குச் செல்வோம்

## து.ரவிகரன் திட்டவட்டம்

குருந்தூர்மலை விடயத்தில் சட்டதரணிகளோடு இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்வோம் என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியிலே அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை உள்ளிட்ட கட்டுமான பணிகள் தொடர்பிலான வழக்கின்கட்டளைவியாழக்கிழமை வழங்கப்பட்டிருந்தது.

வழக்கின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

குருந்தூர் மலை விடயத்தில் நாம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதற்கான வழக்கை குருந்தூர் மலைதொடர்பாக முதன் முறையாக இருபிக்குகளுடன் 12 நபர்களுக்கும், தொல்லியல் நடவடிக்கைகள் என பாராது சட்டவிரோதமாக விகாரை அமைக்கும் கட்டுமான பொருள்கள், புத்தர் சிலைகளுடன் வந்த போது குமுழமுனை தண்ணிமுறிப்பு ஆண்டான்குளமக்களும்இங்குள்ள அரசியல் பிரமுகர்களும் அங்கு சென்று மறித்திருந்தோம்.

அப்போது ஒட்டுசுட்டான் பொலிஸார்மேற்கொண்டவழக்குஇப்போது நடைபெற்று கொண்டிருக்கின்றது. அந்தவழக்கிலே 2023ஆம் ஆண்டு இரண்டாம் மாதம் 23ஆம் திகதி ஒரு காணி அபகரிப்பு நடவடிக்கையை தீர்ப்பதற்கு நாம் அங்கு சென்ற போது குருந்தூர் மலையில் நீதி மன்ற கட்டளையை மீறி அங்கு



கட்டுமான பணி நடைபெறுவதை அவதானிக்க முடிந்தது.

உடனடியாக நான் சட்டதரணிகளுடன் ஆலோசனையுடன் முறைப்பாடு ஒன்றைப் பதிவுசெய்து அந்த முறைப்பாட்டின் நிமித்தம் நீதி மன்றுக்கு வருகை தந்து வழக்கை தாக்கல் செய்தோம். அந்த வழக்கின் பெறுபேறே இன்று கிடைத்தது. இதைத்தவிரதொல்லியல் திணைக்களம், பொலிஸார் எங்கள் மீது போட்ட வழக்கு இரண்டு இருக்கின்றது. அதைவிட புத்த பிக்குமார் தங்களுடைய நடவடிக்கைக்கு வழிபட விடவில்லை என ஒரு வழக்கு இருக்கின்றது. இன்றைய தீர்ப்பே வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாக இருக்கின்றது. அனைத்து மாவட்ட சட்டதரணிகளும் இதற்கு பாடுபட்டார்கள், அரசியல்வாதிகள், மக்கள் அனைவரும் கோமிட்டு அழுத்தம் கொடுத்ததன் காரணமாகவே நாம் இப்படி ஒரு நிலைமைக்கு வந்துள்ளோம். தொடர்ச்சியாக நாம் சட்டத்தரணிகளோடு இணைந்து அடுத்த கட்ட நடவடிக்கைக்கு செல்வோம். - என்றார். (05)

# சந்நிதி தேருக்கு சென்றவர்களின் வீடு உடைக்கப்பட்டுத் திருட்டு

யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி ஆலய தேர் திருவிழாவிற்கு சென்றவர்களின் வீடு உடைக்கப்பட்டு, பணம் மற்றும்நகைகள்என்பன திருடப்பட்டுள்ளன.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று தமது வீட்டினை பூட்டிவிட்டு புதன்கிழமை சந்நிதி ஆலய தேர் திருவிழாவிற்கு சென்று இருந்தனர்.

தேர் திருவிழா முடிந்து வீடு திரும்பிய போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருந்ததை அவதானித்து உள்ளே சென்று பார்த்த போது, வீட்டில் இருந்த 11 அரைபவுண்நகைகளும், 75ஆயிரம்ரூபாபணமும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதை அறிந்துள்ளனர்.

சம்பவம்தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# பதுளையில் குழு மோதல் ஒருவர் பலி; 2 பேர் காயம்

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பதுளை, எகொடபிட்டிய, பத்தனேகெதர பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தம்பகஹாவத்தை, கல்கொடுவேகம பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரரும் அவரது மனைவியும் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையைச் செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர்கள் இருவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# பீடி இலைகள் சிக்கின

(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் கடற்கரை அருகே 2,459 கிலோ பீடி இலைகள் இந்திய சுங்கத்துறையானால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக்கு படகு மூலம் கடத்திச் செல்வதற்காக லொறியில் கடல்கரைக்கு எடுத்து வரப்பட்ட சமயமே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை இரவு 10 மணியளவில இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# சவுதியில் துன்புறுத்தலுக்குள்ளான மலையகப் பெண் நாடு திரும்பினார்

சவுதி அரேபியாவுக்கு வீட்டு பணிப் பெண்ணாகச் சென்றிருந்த நிலையில், அங்கு கடுமையான துன்புறுத்தல்களுக்கு உள்ளானார் எனக் கூறப்படும் மலையகப் பெண்ணான சரஸ்வதி புஷ்பராஜ், இன்று காலை நாடு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவரை அவரின் உறவினர்கள் பொறுப்பேற்றனர்.

**பின்னணி**

சரஸ்வதொடர்பான செய்தியை ஊடகங்கள் வியாழக்கிழமை வெளியிட்டிருந்தன. சரஸ்வதி, இரத்தினபுரி மாவட்டம், எகலியகொட, பனாவல தோட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரு பெண் பிள்ளைகள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர். வறுமை காரணமாக கடந்த ஜூலை 15 ஆம் திகதி சவுதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றிருந்தார்.

அவர் வேலை செய்யும் வீட்டில், வீட்டுக்காரர்களால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டிருந்தார். உணவுகூட முறையாக வழங்கப்படவில்லை எனவும் தமது குடும்பத்தாருக்கு அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனால் அவரின் தொலைபேசியும் வீட்டுக்காரர்களால் பறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு கண்ணீர்மல்க சரஸ்வதி இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் அழுதுபுலம்பும் காட்சி விழிநீரை பெருக்கெடுக்கவைக்குமளவுக்கு அமைந்திருந்தது.

இது தொடர்பான காணொளி வெளியான பின்னர், அவரை வேலைக்கு அனுப்பிய முகவர்கள், சவூதியில் உள்ள தமது நிறுவனத்துக்கு அழைத்துச் சென்றிருந்தனர். பிறிதொரு வீட்டில் வேலை பெற்றுத் தருவதாகவும் அவர்கள் கூறியிருந்தனர். எனினும், தான் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று சரஸ்வதி தெரிவித்திருந்தார். இதன்படி அவருக்கான விமான ரிக்கெட்டும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்று காலை அவர் இலங்கை திரும்பியுள்ளார்.

## கிழக்கில் மூவருக்கு வைத்தியசூரி விருது





(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை சுகாதார அமைச்சின் ஆயுர்வேத திணைக்களம் வைத்தியர்களிடையே நடாத்திய தேசிய விருது வழங்கல்போட்டியில்சிறந்தஆயுள்வேத வைத்தியர்களாக கிழக்கைச் சேர்ந்த மூவர்தெரிவுசெய்யப்பட்டனர். அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் எம்.சீ.எம். காலித் வைத்திய கலாசூரி என்ற ஜனாதிபதி விருது பெற்றார்.

இந்த விருதுக்காக நாடளாவிய ரீதியில் 17,000 ஆயுள்வேத வைத்தியர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்களில் பாரம்பரிய வைத்தியர்கள் பட்டதாரி வைத்தியர்கள் அடங்குவார்கள் .இந்த 17,000 பேரில் 120 வைத்தியர்கள் தேசிய மட்டத்தில் வைத்தியசூரி" ஜனாதிபதி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து மூவர் மாத்திரமே இவ்விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். சம்மாந்துறையைச் சேர்ந்த டாக்டர் காலித் வைத்தியத்துறையில் 20 வருட கால அனுபவம் பெற்றவர். காரைதீவு பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலையில் பல அபிவிருத்தி திட்டங்களை அண்மை காலங்களில் சிறப்பாக மேற்கொண்டு வந்தவர். இதனால் மக்களின் அன்பும் அபிமானமும் பெற்றவர்.

மக்களோடு இனிமையாக பேசிப் பழகும் இவர் இலக்கியவாதியாகவும் திகழ்வது மற்றுமொரு ஆளுமையாகும்.

அவரை சம்மாந்துறை ஆயுர்வேத வைத்திய பாதுகாப்பு சபை புதன்கிழமை பாராட்டி கௌரவித்தது.

## கல்முனையில் ரக்ஷ பந்தன்





(வி.ரி. சகாதேவராஜா)

ரக்ஷ பந்தன் புனித ராக்கி நூல் அணிவிப்பும் விசேட இறை சொற்பொழிவும் கல்முனை பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தில் நடைபெற்றது . 50 வருட தவயோக அனுபவும் முதிர்ச்சியும் பெற்ற இராஜயோகினி மஞ்சு அவர்கள் 'பயமும் பதற்றமும் அற்ற வாழ்வு, என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள் . அதைத் தொடர்ந்து கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் ரக்பந்தன் புனித நூல் அணிவிக்கப்பட்டது. மேலும் பிரசாதம் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

## சாவகச்சேரியில் திருட்டு அதிகரிப்பு அரச அலுவலர் குடும்பங்கள் கவனம்

தற்போது சாவகச்சேரி பொலிஸ் பிரதேசத்தினுள் திருடர்களின் நடமாட்டம் அதிகமாகி மக்களின் விடுகளினுள்புகுந்துபெறுமதியான பொருள்கள் நகைகள் என்பன களவாடிச்செல்கின்ற சந்தர்ப்பம் அதிகமாகி வந்துகொண்டுஇருக்கின்றது.

குறிப்பாக கணவன் மற்றும் மனைவி அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்கின்ற போது அவர்கள் கடமைக்கு செல்லும் சந்தர்பங்களில் வீட்டில் யாரும் இல்லாத போது திருடர்கள் வீட்டிலுள் புகுந்து பொருள்களை களவாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே உங்களின் கீழ் கடமை புரிகின்ற அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் கீழ் உள்ள விடயங்கள் தொடர்பாக தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அனைத்து அரச உத்தியோகத்தர்களும் கடமைக்குவரும்போதுதமது பெறுமதியானபொருள்கள்மற்றும்தங்கநகைகளைஅலுமாரிகளில் வைக்காமல் மிகவும் பாதுகாப்பாக வைத்துவிட்டு செல்லவேண்டும்.

கடமைக்கு வரும் போது வீட்டில் யாராவது ஒருவரை நிறுத்திவிட்டு செல்லவேண்டும் அல்லது வீடு தொடர்பான எதாவது பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து விட்டு செல்லவேண்டும்.

சந்தேகத்திற்கு இடமாக நடமாடுபவர்கள் தொடர்பாக உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அல்லது உங்கள் கிராமசேவையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

சி.சி.ரி.வி. கண்காணிப்பு கெமரா பூட்டப்பட்டிருந்தால் அதன் நேரடி வீடியோவை உங்கள் கை தொலைபேசியில்பதிவுசெய்து அடிக்கடிஅதனைபார்வையிட வேண்டும்.

உங்களிடமுள்ள நகைகளை வெளியில் போட்டுக்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பாக கொண்டு செல்லவேண்டும்.

கோவில்களுக்கு செல்லும் சந்தரப்பத்தில் கட்டாயம் வீட்டில்ஒருவரைநிறுத்திவிட்டு செல்லவேண்டும். அல்லது வீடு மற்றும் பொருள்கள் தொடர்பாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துவிட்டு செல்லவேண்டும்.

அதிகமான பணம் எக்காரணம் கொண்டும் வீட்டில் வைத்திருக்காமல் அவற்றை வங்கிகளில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதன் மூலமாக உங்கள் பெறுமதியான பொருள்களை நீங்கள் பாதுகாத்துக்கொள்ளலாம். (05)

## அரபா நகர் குடியேற்ற கிராம 25ஆவது வருடப் பூர்த்தி விழா









வவுனியா, அரபா நகர் குடியேற்ற கிராமத்தின் 25 வருடப் பூர்த்தியை முன்னிட்டு, ஊர் மக்களின் ஏற்பாட்டில், வெள்ளி விழா விளையாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சி ஆகியன, கடந்த ஞாயிற்றுக்கிழமை அரபா நகர் பிரதேசத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக வவுனியா மாவட்ட உதவி உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ரதீஷ் மற்றும் யு.என்.டி.பி. பணிப்பாளர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர். (05)

## மாகாண பொதுச் சேவை அலுவலக பணியாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி



கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட மகாண பொதுச் சேவையிலுள்ள அலுவலகப் பணியாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி நெறி மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் திருகோணமலை காரியாலய கூட்டண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப்பிரிவின் மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒருநாள் பயிற்சி நெறிக்கு மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் வளவாளராகக் கலந்துகொண்டு இந்தப் பயிற்சி நெறியை நடத்தி வைத்தார்.

இதன்போது, அரச பணியாளர்களின் கடமைப் பெறுப்புக்கள், கடமைகள், செயற்பாடுகள், நடத்தைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய பயிற்சிகள் நடத்தப்பட்டதுடன், அவர்களுக்குள் செய்முறை பயிற்சியும், அறிமுகப் பயிற்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

அலுவலகப் பணியாளர்கள் தங்களின் அறிவுத்திறன்களையும் விருத்தி செய்கின்ற அதேவேளை, இந்தப் பயிற்சியில் பெற்ற விடயங்களை தங்களின் அலுவலகங்களில் அமுல்படுத்தி செயற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாம் பெற்ற பயிற்சியில் பிரதிபலன்களைக் கண்டுகொள்ளலாம் என கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப்பிரிவின் மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரன் கேட்டுக்கொண்டார்.

இந்தப் பயிற்சி நெறியில் மாகாண அமைச்சுக்கள், மாகாண திணைக்களங்கள், நிறுவனங்கள் போன்ற பல அரச காரியாலயங்களில் கடமையாற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி நடாத்தப்பட்டதுடன், பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. (05)

## சாய்ந்தமருதில் வகை வகையான போசனை உணவுகள் தயாரிப்பு







சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் போசனைமிக்க உணவுகளைத் தயாரித்து அதனை தாய்மார்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு வியாழக்கிழமை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ரத் காரியப்பர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் குறித்த அலுவலகத்தின் பொது சுகாதார மாதுக்களும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் இணைந்து சமகால பொருளாதார முகாமைத்துவத்திற்கு ஏற்ற உணவு தயாரிப்பில் ஈடுபட்டதுடன் தாய்மார்களுக்கு அது தொடர்பான விழிப்புணர்வையும் வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் எண். எம். இப்ஹாம், பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பணிப்பாளர், உணவு என்பது வெறுமனே பசியை தீர்க்கும் ஒன்றல்ல. இது நமது சிந்தனையையும் ஆற்றலையும் தீர்மானிக்கின்ற ஒன்றாகவும் காணப்படுகிறது என்றும் இதில் எமது சிறுவர்கள் குழந்தைகளுக்கு அதிக கரிசனை காட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன் உணவும் மருந்தும் நமது மண்ணில் இருந்தே உற்பத்தியாக வேண்டும் என்கின்ற பாரம்பரிய கோட்பாட்டையும் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் ஒரு தாய் போசனையான உணவை மட்டும் ஊட்டுவதில்லை. அத்துடன் அன்பையும் கருணையையும் சேர்த்தே ஊட்டுகிறாள் என்றும் எனவே இவ்வாறான உணவைத் தயாரிக்கும் போது மிகுந்த அக்கறையுடனும் சிறந்த உள்ளத்துடனும் விருப்பத்துடனும் அதில் ஈடுபட வேண்டும் என்றும் இது ஆரோக்கியம் மேலும் வளர்வதற்கு வழிகோலும் என்றும் தெரிவித்திருந்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.09.2023இல் வெளியிடப்பெற்றது.